**பொரலஸ்கமுவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 20 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பொரலஸ்கமுவ நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆண்டிற்கான பாதிடப்பட்ட முத்திரை வரி வருமானத்தை விட மிகையாக கிடைத்திருந்த ரூபா 5,000,000 இற்கான முத்திரை வரி வருமானத்தை மீளாய்வாண்டிற்கான வருமானம் எனக் கணக்கீடு செய்திருந்தமையினால் 2015 ஆண்டிற்கான முத்திரை வரி வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 3,178,457 தொகை பெறுமதியான கப் வண்டி தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்ட தவணைப் பணங்களின் பெறுமதியாகிய ரூபா 2,825,091 இற்கான தொகையினை மூலதனப்படுத்தப்படாமையால் மோட்டார் வாகனக் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகையின் மீதி அதே பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மேலும் அந்த கப் வண்டி தொடர்பாக மேலும் செலுத்த வேண்டியிருந்த 4 தவணைகளின் பெறுமதியாகிய ரூபா 353,136 தொகை மாகாண சபை கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அறவிடப்படக் கூடிய துணைச் சேவைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த கப் வண்டியின் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான தவணைப் பணமாகிய ஆகிய ரூபா 441,420 தொகை மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் அப் பெறுமதியினால் குறைவாகவும் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கு அப் பெறுமதியினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. திருத்திய நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்யும் போது கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக பெற வேண்டிய சம்பள மீளளிப்பு கணக்கு வரவு வைத்தமையால் திருத்திய

நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் பெற வேண்டிய சம்பள மீளளிப்பு மீதி அதன் மூலம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபை என்ற பெயரில் பேணப்படும் கூட்டு சேமிப்பு கணக்கு மீது 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை அட்டுறுவாகியுள்ள கூட்டுத்தொகை ரூபா 620,410 தொகையான வட்டி வருமானத்தில் சபைக்குச் சொந்தமான ரூபா 310,205 இற்கான வருமானம் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை என 2014 ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் 2015 ஆண்டிற்கான ரூபா 147,832 இற்கான வட்டி வருமானத்தையும் வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2014 ஆண்டிற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் என நிர்மாணவேலை நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 344,155 தொகையொன்று ஒதுக்கியிருந்த போதிலும் அவற்றில் உண்மையாக செலவாகி இருந்த தொகை ரூபா 159,714 என்பதினால் முன்னைய ஆண்டின் போது ரூபா 184,441 தொகையினால் கடன்கொடுத்தோருக்காக மிகை ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2014 ஆண்டிற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்கள் என ரத்தனபிடிய கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ரூபா 374,661 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் உண்மையாகவும் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 129,528 என்பதினால் முன்னைய ஆண்டின் போது ரூபா 245,133 இனால் கடன்கொடுத்தோருக்காக மிகை ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டுதல் ரூபா 1,566,747 தொகையும் அதிகரித்துக் காட்டுதல் ரூபா 93,873 தொகையும் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

வழக்குத் தாக்கல் செய்தவைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 56,700 தொகையான அனுமதிப்பத்திர வருமான மீதி 2011 ஆண்டு முதல் வித்தியாசமின்றி தொடர்ந்து முன்கொண்டுவந்து காணப்படுகின்றது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,627,381 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,729,900 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளவாறான வருமானங்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015 | | | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| | உள்ளவாறான அறவிடப்பட வேண்டியவை | உள்ளவாறான அறவிடப் பட்டவை | ஆண்டிற் கான நிலுவை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | உள்ளவாறான அறவிடப்பட வை | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரியும் வரியும் | 25,261 | 12,425 | 12,836 | 22,486 | 27,982 | 24,512 |
| வாடகை | 1,528 | 1,461 | 67 | 375 | 2,107 | 308 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 336 | 336 | - | 57 | 513 | 57 |
| ஏனைய வருமானங்கள் | 42,106 | 22,253 | 19,853 | 30,279 | 30,996 | 57,753 |

**2.2.2 வீதவரி மற்றும் வரிகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வீதவரி நிலுவை ரூபா 22,485,632 தொகை ஆகும்.

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டிற்காக ரூபா 25,000,000 இற்கான முத்திரை வரி வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டு ''ஏனைய வருமானங்கள்'' என்ற விடயத்தின் கீழ் வருமானச் செலவுக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டிற்கான முத்திரை வரி வருமானம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு பணமாக உழைக்கப்படாத வருமானங்கள் கணக்கீடு செய்யப்படுகின்றமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ரூபா 9,896,238 இற்கான மிகை உண்மையாகவே உழைத்திருந்த மிகை ஒன்றென காணப்படவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 756 இன் படி 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 206,051 தொகையான முன்கொடுப்பனவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அம் மீதியில் ரூபா 34,145 இற்கான தீர்க்கப்படாத முற்பண மீதியொன்றும் ரூபா 11,000 இற்கான தீர்க்கப்படாத சிறு காசு மீதியொன்றும் ரூபா 905 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பெறுமதியும் அடங்கியிருந்தது.

(ஆ) பொது நிருவாக, மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் சனநாயக நிருவாக மீதான அமைச்சினால் 2015 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 3,232,282 தொகை பெறுமதியான க்ரூ கப் வண்டி, ரூபா 17,649,179 தொகை பெறுமதியான

பெக்கோ லோடர் வண்டி மற்றும் ரூபா 2,655,318 பெறுமதியான வீல் டிரக்டர் வண்டி என்பவற்றை மூலதனப்படுத்தியிருந்த போதிலும் இந்த சொத்துக்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 1653 இன் பிரகாரம் வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படு நிலையில் காணப்பட வேண்டும். எனினும் அது செயற்படாது போயின் உடனடியாக பழுதுபார்க்கப்பட வேண்டுமெனினும் 13 வாகனங்களின் மைலோமீற்றர் நீண்ட காலமாக செயற்படாது காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

(அ) நகர சபைக்கு அண்மையில் பொது மலசலகூடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த வேலைக்காக பொரலஸ்கமுவ மேற்கு பீ சமூர்த்தி சங்கத்துடன் 2015 ஏப்ரல் 02 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நிர்மாண வேலை 2015 ஜூலை 02 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2016 மார்ச் 14 திகதி ஒப்படைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மே 21 திகதி வரை தொழிநுட்ப உத்தியோகத்தர் கட்டிடத்தை பரிசோதனை மேற்கொண்டு வேலை பூர்த்தி செய்ததற்கான அறிக்கையை விதந்துரைத்து சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணவேலை பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கு தாமதமாகும் ஒரு வாரத்தில் தாமதக் கட்டணம் ரூபா 1,682.28 தொகை வீதம் ரூபா 60,562 இற்கான தண்டப் பணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தண்டப் பணத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலையின் கீழ் உடன்படிக்கைகள் கையொப்பமிட்ட 55 செயற்திட்டங்களில் 6 இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் 02 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவு விடயங்களிடையே நிதியேற்பாடுகள் மாற்றிய பின்னர் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளில் 3 சதவீதம் முதல் 528 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு வினைத்திறனுள்ள நிதி முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான சபையின் 18 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 25,560,000 தொகையிலிருந்து மீளாய்வாண்டின் போது வருமானம் உழைப்பதற்கு சபைக்கு முடியாதுள்ளது.

(இ) சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 102 செலவு விடயங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 14,877,500 இற்கான தொகையில் மீளாய்வாண்டின் போது செலவுகள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நி.பி. 133(1) மற்றும் (2) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் விடயங்களை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்